பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**05 11 2025** **WEDNESDAY** **6.30 PM**

**மாநிலச் செய்திகள்**

**தலைப்புச் செய்திகள்**

1. நாட்டின் பொருளாதாரம் தொடர்ந்து ஏழு சதவீதத்திற்கும் அதிகமான வளர்ச்சியை கண்டு வருவதாக மத்திய அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு தெரிவித்துள்ளார்.

2. வரி குறைப்பின்மூலம், எளிதாக வர்த்தகம் செய்வதை ஊக்குவிக்க அரசு செயலாற்றி வருவதாக மத்திய அமைச்சர் திரு பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

3. தமிழகத்தில் நடைபெறவுள்ள உலகக்கோப்பை இளையோர் ஹாக்கிப் போட்டிக்கான கோப்பையை முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் இன்று அறிமுகப்படுத்தினார்.

4. தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியின் பயன்களை மேலும் விரிவுபடுத்தும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாநில அரசு கூறியுள்ளது.

5. தமிழகத்தில் அடுத்த 24 மணிநேரத்தில் தஞ்சாவூர், ராமநாதபுரம், கிருஷ்ணகிரி உள்ளிட்ட 14 மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

-- இனி விரிவான செய்திகள் ----

<<<<<<<>>>>>>>>

நாட்டின் பொருளாதாரம் தொடர்ந்து ஏழு சதவீதத்திற்கும் அதிகமான வளர்ச்சியை கண்டு வருவதாக மத்திய சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், உலகில் பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்டு வரும் சூழலில், இந்தியா விரைவான பொருளாதார வளர்ச்சியடையும் நாடாக உருவாகியுள்ளது என்று கூறினார்.

இந்த சூழலை திசை திருப்பும் வகையில், எதிர்க்கட்சித் தலைவர் திரு ராகுல்காந்தி, நம் நாடு குறித்து அவதூறு பேசி வருவதாக தெரிவித்தார்.

அத்தகைய சதிகள் ஒருபோதும் வெற்றிபெறாது என்றும், நாட்டின் இளைஞர்கள் பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு உறுதுணையுடன் இருப்பதாகவும் திரு கிரண் ரிஜிஜு குறிப்பிட்டார்.

<<<<<<<>>>>>>>

நியூசிலாந்து சென்றுள்ள மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல், அந்நாட்டு வர்த்தக அமைச்சர் திரு **Todd Mcclay-**வை இன்று ஆக்லாந்தில் சந்தித்து பேசினார்.

இந்தியா — நியூசிலாந்து வர்த்தக கூட்டமைப்பில் உரையாற்றிய அவர், கடல்சார் துறை, விமான போக்குவரத்து, பாதுகாப்பு, கல்வி,

விளையாட்டு மற்றும் சுற்றுலா உள்ளிட்ட துறைகளில் இருநாடுகளுக்கு இடையேயான ஒத்துழைப்பு குறித்து எடுத்துரைத்தார்.

பின்னர், நியூசிலாந்து பிரதமர் திரு கிறிஸ்டோபர் லக்சனுடன் இணைந்து, இந்திய வம்சாவளியினரிடையே திரு பியூஷ் கோயல் உரையாற்றினார்.

வரி குறைப்பின்மூலம், எளிதாக வர்த்தகம் செய்வதை ஊக்குவிக்க அரசு செயலாற்றி வருவதாக அவர் தெரிவித்தார்.

இந்தியா — நியூசிலாந்து இடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தை இறுதி செய்வது, வர்த்தகம் மற்றும் முதலீட்டை வலுப்படுத்துவதோடு மட்டுமின்றி, இருநாடுகளுக்கு இடையே பல்வேறு வாய்ப்புகளுக்கு வழிவகுக்கும் என்றும் திரு பியூஷ் கோயல் குறிப்பிட்டார்.

<<<<<<<>>>>>>>

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மற்றும் ஹாக்கி இந்தியா இணைந்து நடத்தும் உலகக்கோப்பை இளையோர் ஹாக்கிப் போட்டிக்கான கோப்பையை முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் இன்று தலைமைச் செயலகத்தில் அறிமுகப்படுத்தினார்.

இப்போட்டி, சென்னையில் மேயர் ராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டு அரங்கம், மதுரையில் உள்ள தமிழ்நாடு விளையாட்டு

மேம்பாட்டு ஆணையத்தின் விளையாட்டு அரங்கம் ஆகிய இடங்களில் இம்மாதம் 28-ஆம் தேதிமுதல் டிசம்பர் 10-ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது.

தமிழகத்தில் முதல் முறையாக நடைபெறும் இப்போட்டியில், 24 நாடுகளை சேர்ந்த அணிகள் பங்கேற்பதாக மாநில அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>>>

தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியின் பயன்களை மேலும் விரிவுபடுத்தும் வகையில், மாநில அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திரு மதிவேந்தன் தெரிவித்துள்ளார்.

நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் அருகே ஆண்டகலூர்கேட் பகுதியில் மினி டைடல் பூங்கா அமைப்பதற்கு முதலமைச்சர் இன்று அடிக்கல் நாட்டியது குறித்து குறிப்பிட்ட அமைச்சர், இதன்மூலம், தகவல் தொழில்நுட்ப வல்லுநர்கள் 600 பேருக்கு வேலைவாய்ப்புகள் கிடைக்கும் என்று கூறினார்.

<<<<<<<>>>>>>>

தமிழக அரசின் புதிய மினி பஸ் திட்டத்திற்கு தடை விதிக்க சென்னை உயர்நீதிமன்றம் மறுப்பு தெரிவித்துள்ளது.

மாநிலத்தில் போக்குவரத்து வசதி இல்லாத கிராமங்களுக்கு அதற்கான வசதியை ஏற்படுத்தும் வகையில், புதிய மினி பஸ் திட்டத்தை தமிழக அரசு அறிவித்த நிலையில், அதை எதிர்த்து தனியார் பேருந்து உரிமையாளர்கள் சார்பில் ஏற்கனவே வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

ஆனால் இந்த திட்டத்தால் எந்த பாதிப்பும் கிடையாது என அவ்வழக்கை நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

இந்த உத்தரவை எதிர்த்து தனியார் பேருந்து உரிமையாளர்கள் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மேல் முறையீடு வழக்கை நீதிபதிகள் திரு ஆர் சுரேஷ்குமார், திரு ஹேமன்சந்தன் கௌடா ஆகியோர் கொண்ட அமர்வு இன்று விசாரித்தது.

அப்போது தமிழக அரசு சார்பில் ஆஜரான தலைமை வழக்கறிஞர், ஆயிரத்து 350 பேருந்துகளுக்கு உரிமம் வழங்கப்பட்டுள்ளதாகவும், 500 விண்ணப்பங்கள் பரிசீலனையில் உள்ளதாகவும் தெரிவித்தார்.

இதனை பதிவு செய்த நீதிபதிகள் இத்திட்டத்துக்கு தடை விதிக்க முடியாது என தெரிவித்தனர்.

எனினும், பேருந்துகளுக்கு உரிமம் வழங்கியது மேல் முறையீட்டு வழக்கில் இறுதி தீர்ப்புக்கு கட்டுப்பட்டது என கூறி, இதுகுறித்த விசாரணையை ஜனவரி மூன்றாவது வாரத்திற்கு ஒத்திவைத்தனர்.

<<<<<<<>>>>>>>>

மாநிலத்தில் உயர்தர மருத்துவ சேவைகளை வழங்குவதற்காக 25 இடங்களில் அமைக்கப்பட்டுவரும் புதிய மருத்துவமனைகள் படிப்படியாக திறக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டுக்கு கொண்டுவரப்படுவதாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோட்டில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், திருத்தணி, தாம்பரம், திருப்பத்தூர், பழனி, காங்கேயம் உள்ளிட்ட இடங்களில் இதற்கான பணிகள் நடைபெற்று வருவதாக கூறினார்.

நாமக்கல் அரசு சித்த மருத்துவமனையில் இன்னும் ஒன்றரை ஆண்டுகளில் சித்த மருத்துவக்கல்லூரியும் அமைக்கப்படும் என்று திரு மா.சுப்பிரமணியன் குறிப்பிட்டார்.

<<<<<<<>>>>>>>>

யோகா மற்றும் இயற்கை மருத்துவக் கல்லூரிகளில் அரசு ஒதுக்கீடு மற்றும் நிர்வாக ஒதுக்கீட்டில் **MD** பட்ட மேற்படிப்புக்கு இம்மாதம் 9-ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்குமாறு இந்திய மருத்துவ மற்றும் ஹோமியோபதித்துறை அறிவித்துள்ளது.

இதற்கான இணையவழி விண்ணப்பங்களை [www.tnhealth.tn.gov.in](http://www.tnhealth.tn.gov.in) என்ற இணையதளத்தில் பதவிறக்கம் செய்து கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>>>>

வேலூர் சத்துவாச்சாரியில் உள்ள ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் சிறைக்கைதிகள் தயாரித்த கைவினைப் பொருட்கள் சிறப்பு விற்பனை இன்று தொடங்கியது.

இரண்டு நாட்கள் நடைபெறும் இந்த விற்பனை மூலம் கிடைக்கும் வருவாய் கைதிகளின் மறுவாழ்விற்கும், அவர்களது குடும்பங்களின் நலனுக்கும் பயன்படுத்தப்படும் என்று சிறைத்துறை அதிகாரிகள் கூறியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***(Sound Byte — மோகன் - 47 Sec. )***

<<<<<<<>>>>>>>>

தமிழகத்தில் அடுத்த 24 மணிநேரத்தில் தஞ்சாவூர், ராமநாதபுரம், கிருஷ்ணகிரி உள்ளிட்ட 14 மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று எமது செய்தியாளரிடம் பேசிய அவர் இவ்வாறு கூறினார்.

***<u>(Voice Byte — செந்தாமரை கண்ணன் — 54 Sec.)</u>***

<<<<<<<>>>>>>>

*<u>மாவட்டச் செய்திகள்</u>*

காஞ்சிபுரம் மாநகராட்சிக்கு உட்பட்ட உப்பேரிக்குளம் பகுதியில் முதல்வர் படைப்பகம் அமைக்கும் பணியை மாநில கைத்தறித்துறை அமைச்சர் திரு காந்தி தொடங்கிவைத்தார்.

------------------------

சர்தார் வல்லப்பாய் பட்டேல் பிறந்த தினத்தையொட்டி, திருவள்ளூர் மாவட்டத்தில் ஒற்றுமை நடைபயணத்தை ஆட்சியர் திரு பிரதாப் தொடங்கிவைத்தார்.

--------------------

ராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு பகுதியில் உள்ள தனியார் கல்லூரியில் தேசிய ஒற்றுமை பேரணி இன்று நடைபெற்றது.

---------------

திருவண்ணாமலை மாவட்டம் ஜவ்வாதுமலையில் கண்டெடுக்கப்பட்ட விஜயநகரப் பேரரசின் முற்கால ஆட்சியைச்சேர்ந்த 103 தங்க காசுகளும் போளூர் கருவூலத்தில் வைக்கப்பட்டது.

-----------------

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் வழியாக கேரளாவுக்கு காரில் கடத்த முயன்ற 2 டன் ரேசன் அரிசியை, பூதப்பாண்டி பகுதியில் காவல்துறையினர் பறிமுதல் செய்து ஒருவரை கைது செய்தனர்.

--------------------------

விருதுநகர் மாவட்டத்தில் பசுமை பரப்பை அதிகரிக்கும் நோக்கில், கௌசிகா மகாநதிக்கரையில் ஐந்தாயிரம் பனை விதைகள் நடும் நிகழ்ச்சியை ஆட்சியர் சுகபுத்ரா தொடங்கிவைத்தார்.

**<<<<<<<<END>>>>>>>>**